முக்கிய வார்த்தைகள்:
அடைவது
அறிவது
மரியாதை செய்தல்

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**18 ஜூலை 2025 / 22 முஹர்ரம் ஹிஜிரி 1447**

# ஹிஜ்ரத் : சமுதாய ஒற்றுமைக்கான வழி

إِنَّ الْحَمْدَ لِلَّهِ، نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ، وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللهِ،ٱتَّقُواٱللهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيْلِ: يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**அல்லாஹ்வின் அருள்மிக்க அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் நம்மை நாம் அலங்கரித்துக் கொள்வோமாக! "தக்வா" தான் அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடக்க வேண்டுமென்றும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டுமென்றும் நமது உள்ளங்களுக்கு வழிகாட்டுகிறது. நமது "தக்வா" வானது, நமது இருள் நிறைந்த காலங்களில் பிரகாசத்தையும், நமது வாழ்க்கையில் நன்மையையும் ஏற்படுத்தட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

அல்லாஹ், ஏன் மனிதகுலத்தை வித்தியாசமாகப் படைத்துள்ளான்? நாம் ஒரே மாதிரியான சமுதாயமாக ஏன் படைக்கப்படவில்லை? எனும் கேள்விகள் எழுகின்றன. இக்கேள்விகளுக்கானப் பதில்கள் திருக்குர்ஆனின் "அல்-ஹுஜ்ராத்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் 13-வது வசனத்தில் காணப்படுகிறது:

يَـٰٓأَيُّهَا ٱلنَّاسُ إِنَّا خَلَقْنَـٰكُم مِّن ذَكَرٍ وَأُنثَىٰ وَجَعَلْنَـٰكُمْ
شُعُوبًا وَقَبَآئِلَ لِتَعَارَفُوٓا۟ ۚ إِنَّ أَكْرَمَكُمْ عِندَ ٱللَّهِ أَتْقَىٰكُمْ ۚ
إِنَّ ٱللَّهَ عَلِيمٌ خَبِيرٌ ﴿١٣﴾

பொருள்: மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; <u>நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு,</u> பின்னர் உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். [ஆகவே] உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம், அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன்; [யாவற்றையும் சூழ்ந்து] தெரிந்தவன்.

**மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ், நீதம் மற்றும் அமைதியை அடிப்படையாகக் கொண்ட, தக்வா வுடன் கூடிய உறவுமுறையை ஏற்படுத்திக் கொள்ளுமாறு நமக்கு வழிகாட்டுகிறான். இனம், மொழி, தோலின் நிறம் அல்லது பரம்பரையை அடிப்படையாகக் கொண்டு மட்டுமல்ல. இப்புனிதமிக்க பாடம், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் மதீனா நகருக்கு ஹிஜ்ரத் எனும் தியாகப் பயணம் செய்த போது மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டது. "ஹிஜ்ரத்"

நிகழ்ச்சியானது, ஒரு புதிய சமுதாயம் உருவாகுவதற்குக் காரணமாக இருந்தது. அச்சமுதாயம் பல்வேறு குலங்கள் மற்றும் கோத்திரங்களை உள்ளடக்கியதாகவும், அவர்களின் உள்ளங்கள் ஒன்றுபட்டதாகவும் ஒருவருக்கொருவர் மரியாதை செய்து, அமைதியுடன் வாழக் கூடியதாகவும் இருந்தது.

மதீனா நகரில், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் முஹாஜிரீன் தோழர்களுக்கும் அன்ஸாரித் தோழர்களுக்கும் மத்தியில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். மேலும் அவர்கள் மதீனா நகரில் ஒரு அரசியலமைப்பையும் ஏற்படுத்தினார்கள். அந்த அரசியலமைப்பானது முஸ்லிமல்லாதவர்கள் முதற்கொண்டு, அனைவரின் உரிமைகளையும் பாதுகாப்பதாக இருந்தது. அநீதம், அடக்குமுறை ஆகியவை இல்லாமல் அனைவரும் அமைதியாக வாழ, வழி வகுத்தது.

இஸ்லாமிய மார்க்கம், பல்வேறு மதங்கள் மற்றும் இனக்குழுக்களுக்கிடையே சமத்துவக் கொள்கைகள், ஒற்றுமை, மற்றும் அமைதியை நிலைநாட்டக்கூடியதாக உள்ளது என்பதற்கு மிகத் தெளிவான பல ஆதாரங்கள் உள்ளன.

ஒருமுறை, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றார்கள்:

إِنَّ اللهَ قَدْ أَذْهَبَ عَنْكُمْ عُبِّيَّةَ الجَاهِلِيَّةِ وَفَخْرَهَا بِالآبَاءِ، مُؤْمِنٌ تَقِيٌّ، وَفَاجِرٌ شَقِيٌّ، أَنْتُمْ بَنُو آدَمَ، وَآدَمُ مِنْ تُرَابٍ.

பொருள்: நிச்சயமாக அல்லாஹ், அறியாமைக் கால ஆணவம், கர்வம் மற்றும் பரம்பரையைக் கொண்டு பெருமையடிப்பது ஆகியவற்றை உங்களை விட்டும் அகற்றி விட்டான். இப்போது நீங்கள் ஒன்று, பக்திமிக்க ஓரிறை நம்பிக்கையாளர்களாக இருப்பீர்கள்; அல்லது இழிவான பாவிகளாக

இருப்பீர்கள். நீங்கள் அனைவரும் ஆதமின் பிள்ளைகளாக இருக்கின்றீர்கள்; ஆதம் அவர்களோ மண்ணால் படைக்கப்பட்டார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அபூதாவுத் ரஹ்]

**வெள்ளிக்கிழமையில் ஒன்றுகூடியுள்ள ஜமாஅத்தார்களே!**

"ஹிஜ்ரத்" மூலம் நாம் பெற வேண்டிய இரண்டு முக்கியப் பாடங்களில் கவனம் செலுத்துவோமாக! அவ்விரண்டு பாடங்களும் தற்காலத்துக்கு மிகவும் பொருத்தமானவையாகும்:

**முதலாவதாக, மனிதர்களிடம் காணப்படும் வேறுபாடுகளை அன்புகொள்வதற்கான வழிமுறையாகக் காண வேண்டுமே தவிர, வெறுப்பதற்கான காரணிகளாகக் காணக் கூடாது.**

அன்பிற்குரிய சகோதரர்களே! நமது தோற்றங்கள், இனம் மற்றும் பின்னணிகளில் காணப்படும் வித்தியாசங்கள் யாவும் அல்லாஹ்வின் கட்டளையால் ஏற்படுத்தப்பட்டவையாகும். அவை தவறுதலாக ஏற்படுத்தப்பட்டவையல்ல, மாறாக, நாம் எவ்வாறு நீதமாகவும் கருணைச் சிந்தனையோடும், ஒருவர் மற்றவர் மீது அன்பு கொள்பவர்களாகவும் இருக்கின்றோம் எனச் சோதித்துப் பார்ப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்ட வையாகும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-ஹுஜ்ராத்" எனும் அத்தியாயத்தின் 11-வது வசனத்தில் கூறுகிறான்:

"ஓரிறை நம்பிக்கையாளர்களே! ஒரு சமூகத்தார் பிறிதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம்; ஏனெனில், [பரிகசிக்கப்படுவோர்] அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம்; [அவ்வாறே] எந்தப் பெண்களும் மற்றெந்தப் பெண்களையும் [பரிகாசம் செய்ய வேண்டாம்] ஏனெனில், இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம்; இன்னும்

உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள்; இன்னும் உங்களில் ஒருவரையொருவர் தீய பட்டப் பெயர்களால் அழைக்காதீர்கள்; ஈமான் கொண்ட பின் அவ்வாறு தீய பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும். எவர்கள் இவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளவில்லையோ அத்தகையவர்கள் அநியாயக்காரர்கள் ஆவார்கள்"

சகோதரர்களே! மேற்கண்ட வசனத்தின் மூலம், அனைத்து வகையான கேலி செய்தல், ஏளனம் செய்தல், வாய்மொழி துஷ்பிரயோகம் ஆகிய அனைத்தையும் அல்லாஹ் கண்டிப்பாகத் தடை செய்கிறான் என்பதை அறிகிறோம். ஒருவரது சிறப்புத் தன்மையாகிறது, அவரது பரம்பரை அல்லது தோற்றத்தை வைத்து மதிப்பிடப்படுவதில்லை. மாறாக, ஒருவரது உள்ளத்தில் காணப்படும் ஓரிறை நம்பிக்கை மற்றும் தக்வா எனும் இறை பக்தியின் மூலமே மதிப்பிடப்படுகிறது.

உண்மையில், மற்றவர்களைச் சிறுமைப்படுத்துவதானது, வெறுப்பைத் தான் ஏற்படுத்தும்; நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும்; ஒற்றுமையைப் பலஹீனமாக்கி விடும். இஸ்லாம், பணிவாகவும் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் இருக்குமாறும், மரியாதையாகப் பேசுமாறும் நமக்கு வழிகாட்டுகிறது.

**இரண்டாவதாக, நமது வார்த்தைகள் நம்மை ஒன்றுபடுத்த வேண்டுமே தவிர, பிரிக்கக் கூடாது.**

நபித்தோழர் அபூதர் [ரலி] அவர்கள், மற்றொரு நபரை இனவெறியைத் தூண்டும் சொல்லால் அவமரியாதை செய்ததால், அபூதர் [ரலி] அவர்களை இறைத்தூதர் [ஸல்] அவர்கள் கண்டித்தார்கள். அபூதர் [ரலி] அவர்களை நோக்கி:

إِنَّكَ امْرُؤٌ فِيكَ جَاهِلِيَّةٌ

பொருள்: "நிச்சயமாக, இன்னும் உம்மிடத்தில் அறியாமைக் கால செயல்கள் காணப்படுகின்றன" என இறைத்தூதர்[ஸல்] அவர்கள் கூறினார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் மனிதப் புனிதராக இருந்தார்கள்; பல அற்புதங்கள் மற்றும் இறை வழிகாட்டுதல்களால் அருள் புரியப்பட்டிருந்தார்கள். இந்நிலையிலும் அவர்கள் அனைத்து வகையான இனவெறி மற்றும் இனப்பாகுபாடுகளை எதிர்த்தார்கள் என்றால், சொர்க்கம் வாக்களிக்கப்படாத, சாதாரண மக்களாக இருக்கும் நாம் அவ்வாறு செய்யாமலிருக்கலாமா? மற்றவர்களை விட தன்னைப் பெரிதாகக் கருதுவதும், மற்றவர்களின் தரத்தைத் தாழ்த்தும் வார்த்தைகளைப் பயன்படுத்துவதும் எவ்வாறு நியாயமாகும்?

உண்மையான இஸ்லாம், ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ள வேண்டுமென்றும், மற்றவர்களை மதிக்க வேண்டும்; அவமதிக்கக் கூடாதென்றும் நமக்குப் போதிக்கிறது. அல்லாஹ்வை நினைவில் கொள்பவர்களும் மகத்துவமிக்க அல்லாஹ்விடம் தம்மை ஒப்படைத்துக் கொள்பவர்களும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பவர்களாக இருப்பார்கள் எனவும், அல்லாஹ் தடைசெய்துள்ள விஷயங்களைத் தவிர்ந்து கொள்பவர்களாக இருப்பார்கள் எனவும் வழிகாட்டுகிறது.

நமது நாவுகள் அல்லாஹ்வினால் நமக்கு வழங்கப்பட்டுள்ள வெகுமதிகளாகும்; வல்லமைமிக்க அல்லாஹ்வினால் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமானிதங்களாகும். எனவே அவற்றை நாம் அறிவுப்பூர்வமாகப் பயன்படுத்த வேண்டும். நம்மை உயர்த்துகின்ற, ஒன்றுபடுத்துகின்ற வார்த்தைகளைப் பேச வேண்டும்; ஒருவர் மற்றவரை மரியாதையாகவும் அன்புடனும் நடத்த வேண்டும். காரணம் அதில் தான் அமைதியின் விதைகள் உள்ளன. ஒருவர் மற்றவருக்கு எதிராக அநீதம்

செய்வதும், கொடுமை புரிவதும் மனிதகுலத்தின் தரத்தைத் தாழ்த்தும் என்பது மட்டுமல்ல, அது அல்லாஹ்வின் பார்வையில் பாவமாகக் கருதப்படும்.

**மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே**!

"ஹிஜ்ரத்" துக்குப் பின்பு, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் முஹாஜிரீன்கள் மற்றும் அன்ஸாரித் தோழர்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தியதும், முஸ்லிமல்லாத சமுதாயங்களுடன் அமைதியான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டதும், இஸ்லாம் சகோதரத்துவத்தையும் நீதத்தையும் அமைதியையும் விரும்பும் மார்க்கமாகும்; அவற்றின் பால் வழிகாட்டும் மார்க்கமாகும் என்பதற்குத் தெளிவான சான்றுகளாக உள்ளன.

பன்முகத்தன்மைகள் மற்றும் வேற்றுமைகளுக்கிடையே அன்பை ஏற்படுத்தும் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென இஸ்லாம் விரும்புகிறது. நாம் முஸ்லிம்களுக்கு மத்தியில் மட்டுமல்ல, எவ்வித பாகுபாடின்றி மனிதகுலத்தார் அனைவருக்கும் கிருபை காட்ட வேண்டுமெனவும் நீதத்தை நிலைநாட்டுபவர்களாக இருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளோம்.

எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, அமைதிக்கு வித்திடும் மக்களாகவும், எவ்வித பாகுபாடுமின்றி அனைவருக்கும் மத்தியில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தும் மக்களாகவும் நம்மை ஆக்குவானாக! அல்லாஹ்வின் கிருபையும் அவனது கருணையும் நமக்கு இம்மையிலும் மறுமையிலும் கிடைக்கட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.